DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : பெருமாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th February 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

முதல்விசாரணை:

நான் தற்போது பெங்களூரில் குடியிருந்து வருகிறேன். நான் காற்றாலையில் எலக்ட்ரிக்கல் டெக்னீசியனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். 2018ம் வருடம் ஒரு நாள் சங்கரன்கோவில் காந்திநகர் 4வது தெருவில் உள்ள எனது வீட்டிற்கு 7 வீடுகள் தள்ளி ஒரு கணவன் மனைவிக்கு இடையில் பிரச்சனை நடந்திருந்தது. பிரச்சனை நடந்ததற்கு மறுநாள் காலை சுமார் 11 மணியளவில் போலீசார்வந்து அந்த இடத்தில் விசாரித்தார்கள். போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தபோது நான் அருகில் இருந்தேன். போலீசார் என்னிடம் பார்வை மகஜரில் கையொப்பம்

போடச் சொன்னார்கள். போட்டுக் கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

பார்வை மகஜரில்உள்ள சாட்சிக்கையொப்பம் என்னுடையதல்ல என்றாலும், பார்வை மகஜர் தயார் செய்யப்பட்ட நேரத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகாமையில் யாருடைய வீடுகள் இருந்தன என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**